[1973 நவம்பர் 26

* 390 *Q*.—THIRU N. K. PALANISWAMY Will the Hon. the Chief Miniser be pleased to state—

(*a*) whether this Government have received any guidelines during 1973 on the preparation of the proposals and schemes to be included in the Fifth Five-Year Plan; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) இந்திய அரசின் திட்ட ஆணைக் குழுவிடமிருந்து வரப் பெற்ற துறை வாரியான வழிகாட்டிக் கோட்பாடுகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் அதிகமான நிதி நமது மாநிலத்திற்கு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்த நமது அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் 1,149 கோடி ரூபாய் என்பதைத் தற்காலிகமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அதை 1,200 கோடி ரூபாய் அளவாவது உயர்த்த வேண்டும் என்று நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, சமீபத்திய விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இந்தத் திட்டங்கள் குறைக்கப் பட்டிருக்கின்றனவா? மாநில திட்டக் கமிஷன் கொடுத்திருக்கக் கூடிய திட்டங்களில் எது எது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் முதலமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதை விவரமாகச் சொல்வதென்பது இப்பொழுது இயலாது. பொதுவாக ஒவ்வொரு திட்டத்திலுமே ஓரளவு அவர்கள் குறைத்திருக்கிறார்கள். எதிலே பெரும்பான்மையாகக் குறைத்துவிட்டார்கள் என்பதைத் தனிக் கேள்வி போட்டால்தான் சொல்ல முடியும்.

1973 நவம்பர் 26]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 1,532 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறது. இதில் பொதுத் துறைக்கு எவ்வளவு, தனியார் துறைக்கு எவ்வளவு, சென்ட்ரல் செக்டாரில் எவ்வளவு, ஸ்டேட் செக்டாரில் எவ்வளவு என்ற விவரங்களை முதலமைச்சரவர்கள் தருவார்களா? அது மட்டுமின்றி, இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து இந்த மன்றத்தில் விவாதத்தை ஆரம்பிப்பதற்கு முதலமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவாதத்தினை இந்த மன்றத்தில் ஆரம்பிப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அப்படியொரு விவாதத்தை, நம்முடைய அலுவலாய்வுக் குழுவில் ஆராய்ந்து முடிவு எடுத்த பிறகு மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட எல்லா விவரங்களுக்கும் கூடப் பதிலளிக்க இயலும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1,532 கோடி ரூபாய்க்குத் திட்டம் வகுத்தோம். அதில் 1,149 கோடி ரூபாய் என மத்திய திட்டக்குழு தற்காலிகமாக நிர்ணயித்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையக்கூடிய நேரத்தில் இந்த 1,149 கோடி ரூபாய்க்கு வகுத்த திட்டங்களுக்கு அதிகத் தொகை தேவைப்படக் கூடும். ஆகவே, மாநில அரசு கோரியபடி 1,532 கோடி ரூபாய் வேண்டும் என்று வற்புறுத்துவார்களா? ஏற்கெனவே கொடுத்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த விவாதம் எப்பொழுது நடத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1,532 கோடி ரூபாய்க்கான திட்டத்தை மீண்டும், மீண்டும் நாம் வற்புறுத்துகிறோம் என்பது பெயரளவில் பயன்படுமே தவிர, 1,200 கோடி ரூபாய்க்கு அவர்கள் சம்மதித்து ஒப்புதல் அளித்துவிட்டாலே நாம் மகிழத்தக்க ஒரு காரியமாக இருக்கும். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கேட்ட அந்த விவாதம் எப்பொழுது நடத்தப்படலாம் என்பதை அலுவல் ஆய்வுக் குழுவில் யோசித்து முடிவு எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கும் தொகை மிகக் குறைவு என்று சொல்லப்படுவது உண்மையா? சேலம் உருக்காலைத் திட்டம் இந்த

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்ற ஒரு வருத்தம் தமிழ்நாட்டு மக்களுக்கு இருப்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துரைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, இன்னும் மற்ற மாநிலங்களில் இந்தத் திட்டங்கள் முடிவடையவில்லை. அது முடிவடைந்த பிறகு ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு தரப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். சேலம் திட்டத்தைப் பொறுத்து, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைச் சேர்த்துத் துரிதமாக நிறைவேற்றவேண்டும் என்ற வகையில் நாம் மத்திய அரசே நடத்துகிற திட்டங்கள்' என்ற பட்டியலில் குறித்துக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் ஸ்டீல் ப்ளாண்ட் வேலை சேர்க்கப்படாமல் தாமதப்பட்டுவிடும் அல்லது நடைமுறையில் நடைபெறாது என்ற யூகங்கள் சரியானவை அல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மேலும் குறைக்கப்படாமலிருக்க மத்திய அரசு ஏதாவது முயற்சி எடுக்கிறதா? அந்தத் தொகை குறைவு பெறாமலிருக்க மாநில அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருளாதார நெருக்கடி காரணமாக, இப்பொழுது அவர்கள் ஒதுக்கியிருக்கும் 1,149 கோடி ரூபாய் என்று வரையறுத்து இருக்கிற தொகையைக் குறைப்பதாக எந்தவிதமான தகவலும் கிடையாது. அதை 1,200 கோடி ரூபாயாக ஆக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய முயற்சிகளை மாநில அரசு நிச்சயமாகச் செய்யும்.

திரு. எஸ். வடிவேல் : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் ஏதாவதுனும் ஆரம்பிக்கப்படுமா? அப்படி ஆரம்பிக்கப்படுமானால் அந்தத் தொழிற்சாலைகள் பொதுத் துறையிலா அல்லது தனியார்த் துறையிலா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பாரா?

1973 நவம்பர் 26]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தனியார் துறைத் தொழிற்சாலைகளைப் பற்றி இதில் குறிப்பிட முடியாது. திட்டங்களுக்குப் பணம் தேவை என்று கேட்கும்போது பொதுத் துறைத் தொழில்களுக்குத்தான் கேட்டிருக்கிறோம். இப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கூட்டுத் துறைத் திட்டங்கள் இதிலே இடம் பெற முடியுமே தவிர, தனியார் துறைத் திட்டங்களுக்கு நாம் அவர்களிடமிருந்து தொகை கேட்கவேண்டிய அவசியமே இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, செயல்படுத்த விருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மனித சக்தியை முழுவதுமாகப் பயன்படுத்துகிற ஏற்பாடு இருக்கிறதா? அன்றாடம் மக்களுக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களை உண்டாக்குவதற்கு முதலிடம் அளிக்கபட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவற்றை யெல்லாம் கருத்திற்கொண்டுதான் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றும் வரையில் மத்திய அரசுக்கு நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய பாக்கியை ஒத்திப் போடவேண்டுமென்றும், அதே நேரத்தில் பெட்ரோல் விற்பனையைத் தமிழகத்தில் வைத்திருப்பதற்காகப் பல கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டியிருக்கிறதே அதைச் சீக்கிரமாகத் திருப்பித் தந்துவிடுமாறு நமது அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய மாநிலத்தின் நன்மைக்காக எவை எவற்றை மத்திய அரசிடமிருந்து வலியுறுத்திப் பெறவேண்டுமோ அவைகளை யெல்லாம் வலியுறுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக மாநில அரசு 400 கோடி ரூபாய் வரையில் திரட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே அந்தத் தொகையை நமது அரசு எவ்வாறு திரட்டப் போகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 400 கோடி ரூபாய் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் திட்டத்தொகை 570 கோடி ரூபாயாக

இருந்தபோது, மாநில அரசு அதனுடைய ரிஸோர்ஸில் 368 கோடி ரூபாயாகவும், மத்திய அரசு 202 கோடி ரூபாயாகவும் அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கின. இப்பொழுது நாம் எவ்வளவு திரட்ட வேண்டும் என்பது மத்திய அரசு எவ்வளவு கொடுக்க இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தூத்துக்குடித் துறைமுகம் பயனுள்ளதாக ஆக வேண்டுமென்றால், சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று முன்பு நாம் வற்புறுத்தி வந்தோமே, அது இந்த ஐந்தாவது திட்டத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதா? இல்லையானால், அதை வற்புறுத்த மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களில் 14 திட்டங்களை நம்முடைய அரசு மத்திய அரசுத் திட்டக் குழுவிற்குத் தெரிவித்திருக்கிறது. அந்த 14 திட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சேதுசமுத்திரத் திட்டமும் ஒன்றாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தற்போது மின்சார உற்பத்திக் குறைவினால் நமது மாநிலம் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, வரவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏதாவது பெரிய திட்டங்கள் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிறைய திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றுவதற்காக அந்தத் திட்டங்களில் நாம் குறித்திருக்கிறோம். 'செகண்டு மைன் கட் அட் நெய்வேலி' என்பதும், ஆயிரம் மெகா வாட் மின் உற்பத்தி செய்வது என்பதும் தேவை என்பதை மத்திய அரசின் சார்பில் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களில் ஒன்றாகக் குறித்து, அதற்காக ஒரு தீர்மானத்தையும் கூட அண்மையில் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அதன்னியில் மின்சார உற்பத்தி குறித்த பல்வேறு திட்டங்களை நாம் அந்தத் திட்டங்களில் வரையறுத்துக் கூறியிருக்கிறோம்.

திரு. கே. கந்தசாமி: கல்விச் சாலைகளை நாம் அதிகரித்துக் கொண்டே போகிற நிலையில் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாகி, அதனால் படித்தவர்களிடையே வேலையில்லாத்

திண்டாட்டம் மிக அதிகமாக நாட்டில் வளர்ந்து வருகிற இந்த நேரத்தில் படித்த மாணவர்களுக்கு படித்து முடிந்தவுடன் அவர்களுக்கு உத்திரவாதத்துடன் வேலை கிடைக்கக்கூடிய அளவுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா? அதுபற்றி மத்திய அரசுக்கு மாநில அரசால் கூறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவைகளையெல்லாம் அடிப்படை மையமாக வைத்துத்தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவைகள் செயல்படுகின்ற நேரத்தில் சில வேறுபாடுகள் இருந்துவிடுகின்றன. ஆகவே, மொத்தத்தில் இந்திய நாட்டின் பொருளாதார அடிப்படையில் இந்தத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவைகளுக்கேற்ப மாநில அரசும் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: கூட்டுத் துறையில் தொழில்களை உருவாக்கக்கூடிய திட்டம்தான் இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுத் துறையில் தனியார் பங்கு எவ்வளவு, அரசின் பங்கு எவ்வளவு? நிர்வாகத்தில் சம பங்கா? அரசினுடைய பங்கு அதிகமாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசினுடைய பங்கு ஒரு பர்சென்ட் அதிகமாகத்தான் இருக்கும்.

திரு. த. சோணையா: முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற பொழுது 14 திட்டங்கள் மத்திய சர்க்காரினால் நிறைவேற்றப்பட இருக்கின்றன தமிழகத்தில் என்று சொன்னார்கள். அந்தத் திட்டங்கள் எங்கெங்கு நடைபெற இருக்கின்றன, அவை என்னென்ன திட்டங்கள் என்பதை இங்கே அறிவிக்க இயலுமா?

THE HON. DR. M. KARUNANIDHI: The important items are—

(i) Second mine cut at Neyveli and a 1,000 MW thermal station; using the additional lignite to be raised;

(ii) The development of Cuddalore as an alongside harbour;

(iii) Intensification of activity on the Salem Steel Plant.

[1973 நவம்பர் 26

(iv) Expansion of Kalpakkam Nuclear Plant;

(v) Setting up of another Nuclear Plant at Tuticorin;

(vi) Intensification of oil exploration activities both in the Cauvery Basin and off the coast of Tamil Nadu;

(vii) Conversion of the Madras-Tiruchirappalli-Madurai-Tuticorin line into broad-gauge;

(viii) Construction of a new broad-gauge line between Karur and Dindigul;

(ix) Construction of a mass transit system for the Madras metropolitan area;

(x) Implementation of Sethusamudram Project;

(xi) Establishment of a shipyard at Tuticorin;

(xii) Setting up of an industrial refinery at Tuticorin;

(xiii) Setting up of a fertiliser plant near Cauvery Delta;

(xiv) Establishment of defence industries.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு இடையே சில கூட்டுத் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லியில் ஒரு கருத்தைக் கூறியிருப்பதாக அறிகிறோம். அப்படிப்பட்ட கருத்தை வற்புறுத்தி கூட்டுத் தொழில்களைத் துவக்க—உதாரணமாக வங்காளத்தில் சர்க்கரை ஆலை போன்றவும், நம்முடைய மாநிலத்தில் சணல் ஆலை போன்றவும் ஆரம்பிப்பதற்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் வகை செய்வதற்கு தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விரைவில் நடைபெற இருக்கிற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் அதுபற்றிக் கருத்துக்கள் உருவாக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹொகனகல் திட்டம் துவங்கினால் ஹைடல் பவரைப் பொறுத்து தமிழ் நாட்டில் 1,000 மெகாவாட் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு பல இக்கட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஹொகனகல் பவர் திட்டத்தை அமல் நடத்துவதற்கு ஏதாவது சிபார்சு செய்திருக்கிறோமா?

1973 நவம்பர் 26]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது மற்ற மாநிலங்களோடு பேசி முடிவடைய வேண்டிய காரியமாக இருக்கிறது. இப்பொழுது மாநிலங்களுக்கு இடையே நடைபெறுகிற பேச்சுவார்த்தைகளின் வெற்றியைப் பொருத்து இந்தத் திட்டம் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: ஒதுக்கப்பட்ட தொகையில் மின்சார அபிவிருத்திக்கு—தொழில் அபிவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் மின்சாரம் மிகவும் தேவையாக இருக்கிறது—ஒதுக்கப்பட்ட பணம் 6-ல் ஒரு பங்கு தான். இது போதுமா? இதை அதிகப்படுத்துவதற்கு குறைந்தது மூன்றில் ஒரு பங்காக அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் ஏதேனும் வழி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது நாம் ஒதுக்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிற திட்டங்கள் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுவிட்டாலே நமக்கு இருக்கிற மின்சார பற்றாக்குறையைப் போக்குவதற்கு வழிவகைகள் காண முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 391, 392, 393, 394 எண்ணுள்ள கேள்விகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகின்றன.

Building Materials Finance Corporation.

* 395 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set-up a Building Materials Finance Corporation in the State; and

(*b*) whether any request has been made to the Central Government by the State Government in this regard?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ்: இவ்விதமாக ஒரு கழகம் அமைக்கப்பட்டால் நிதி உதவி அளிப்பதற்கும், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸை வளர்ப்பதற்கும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்குமாகையால், அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?